1992 ஜனவரி 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகள் எடுத்திருக்கின்ற சிக்கன நடவடிக்கைகளுக்கு ஏற்ப என்னுடைய சம்பளத்திலே மாதம் ரூ. 500-ஐ இந்த அரசாங்கம் பிடித்துக்கொள்ளவேண்டும் என்றும், அந்த ரூ. 500-ஐக் குறைத்து வாங்கிக்கொள்கிறேன் என்றும் உறுதி அளிக்கிறேன் இங்கே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேட்கவேண்டும்.

வினா எண் 2. திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

2—

போலி சீட்டு கம்பெனிகளைத் தடை செய்தல்.

* 2143—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் போலி சீட்டுக் கம்பெனிகளைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சீட்டு நிதிச்சட்டம் 1982-ன் கீழ் தமிழகத்தில் நடத்தப்படும் பதிவுறாச் சீட்டுகள் குறித்து புலனாய்வு செய்து அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகிறது.

மேலும், சென்னை நகரத்தைப் பொறுத்தவரை "சீட்டு விழிப்புக் குழு" என்ற அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் போலி சீட்டுக் கம்பெனிகள் வைத்து இரட்டிப்பாகப் பணத்தைத் தருகிறோம் என்று சொல்லி ஏழை எளிய மக்களை, அரசு ஊழியர்களை ஏமாற்றிக் கொண்டு, பல கோடி ரூபாய்களை சம்பாதித்துக் கொண்டு பிறகு அந்த இடத்தைக் காலி செய்துவிடுகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளில் இதுவரையில் அரசு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றது? நடவடிக்கைகளின் விவரங்கள்

என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, தமிழகத்தில் சில இடங்களில் பல போலி கம்பெனிகள் பொருள்களை இரட்டிப்பு மதிப்பில் தருவதாக சீட்டு சேர்த்து ஏமாற்றி வருகின்றன. இது சீட்டு நிதி சட்டத்தின்கீழ் வராது. இது Prize Chits and Money Circulation Scheme Banning Act, 1978 என்ற சென்ட்ரல் ஆக்டின்கீழ் வருவதன் காரணமாக அதுபற்றி வருவாய்த்துறை வட்ட ஆட்சியாளருக்கும், அதேபோல போலீசாருக்கும் தகவல் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட போலி கம்பெனிகளைக் கண்டறிவதற்கு—அநேகமாக போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் கூட பல பேர் மதுரை, திருச்சி போன்ற இடங்களில் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைக் கட்டி ஏமாந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, மிகப் பெரிய விளம்பர போர்டுகளோடு இதுபோன்ற நிறுவனங்கள் நடத்துவதைக் கண்டறிந்து காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக உள்ளதா என அறிய விரும்புகிறேன். அதுபோன்று ரெவின்யூ துறை அதிகாரிகளுக்கும், காவல் துறையினருக்கும் இதுபற்றி அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது அமுலில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே ஏதாவது தகவல் இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்படி நடத்தப்படும் சீட்டுக் கம்பெனிகள் எத்தனை உள்ளன? எத்தனை சீட்டு குரூப்கள்

1992 ஜனவரி 30]

தற்சமயம் நடத்தி வருகிறார்கள்? அப்படி நடத்துகின்ற அந்த குரூப்களுக்கு அந்தக் கம்பெனிகள் வைப்பு நிதியாக ஏதாவது கட்டியுள்ளார்களா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், இன்றைய நிலையில் 3,891 சீட்டு கம்பெனிகள் இயங்குகின்றன. அந்த சீட்டு கம்பெனிகள் 42,163 சீட்டு குரூப்பை நடத்தி வருகின்றன. இதற்கு செக்யூரிட்டி டெப்பாசிட்டாக, இந்த 3,891 சீட்டு நிறுவனங்களும் 100 கோடி ரூபாய் அளவுக்குச் செலுத்தியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 'வாழ்க வையகம்' என்கிற விதத்தில் ஒரு சீட்டு கம்பெனியை நடத்தி, அதிலே கிட்டத்தட்ட 2½ கோடி ரூபாயை அரசு 'சீஸ்' பண்ணியிருக்கிறது. அங்கேயுள்ள ஏழையெளிய மக்கள், அரசு சீஸ் பண்ணிய பணத்திலேகூட அவர்கள் கட்டிய தொகையில் விகிதாசாரத்திற்கேற்ற அடிப்படையில் அந்தப் பணத்தை திருப்பி கொடுத்தால் பரவாயில்லையென்று கருதுகிறார்கள். அரசு சீஸ் பண்ணிய அந்தப் பணத்தை உரிய நபர்களுக்கு வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இப்பொழுது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்தில் கொடுத்தாலும் சரி அல்லது தனிக் கேள்வி கேட்டாலும் சரி, தகவல் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி சீட்டு கம்பெனிகளைத் தொடங்குவதற்கு முன்னதாகவே இவைகளைத் தடை செய்வதற்கு ஏதாவது சட்டம் கொண்டு வர முடியுமா? ஒரு மாதத்திற்கு முன்னால் பார்க்கின்றபோது தனகோடியாக இருந்தவன் மீக

பெரிய கோடீஸ்வரன் ஆகிறான். சாதாரண பிச்சாதிபதி, லட்சாதிபதி ஆகிறான். கடந்த மாதம் பார்க்கின்றபோது சாதாரணமாக இருந்த சாதாரண தொண்டன் கோடீஸ்வரன் ஆகிறான். இதற்கு எல்லாம் இன்கம் டாக்ஸ், கமர்சியல் டாக்ஸ் போன்ற துறைகள் இல்லையா? இதற்கு எல்லாம் சர்க்கார் இருக்கிறது. இதைக் கண்காணித்து அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? சாதாரண சட்டமன்ற உறுப்பினர் ஏதாவது ஒரு சின்ன குறை செய்துவிட்டால் வாரப் பத்திரிகைகள் எல்லாம் கடுமையான விமர்சனம் செய்து, கொள்ளையடித்துவிட்டார்கள். கோடீஸ்வரர்களாகிவிட்டார்கள் என்று எல்லாம் எழுதுகின்ற இந்தக் காலத்தில் இதை எல்லாம் வாரப் பத்திரிகைகள் எழுதி அரசுக்குச் சுட்டிக்காட்டலாம். அதே நேரத்தில் தமிழகத்தையே சிட்டிங் செய்த கும்பலை ரூட்டிங் செய்து சிட்டிங்கில் அமர்ந்து இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற போலி சீட்டுக் கம்பெனிகள்—முறைகேடுகள்மீது—நடவடிக்கை எடுப்பது பற்றி முழு தகவல் இல்லை. இதுவரையில் 'சீட்டு விஜிலன்ஸ் செல்' மூலமாக 3¼ கோடி ரூபாய் மதிப்புள்ள பதிவுறாச் சீட்டுகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு தொடரப்பட்டு தண்டனை பெற இருக்கிறது. 3 1/4 கோடி ரூபாய் பெறுமான அளவுக்கு முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3. திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

சீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம்.

* 786—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், சீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?